1984 மார்ச் 10]

சட்டமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சேலம் மாவட்டத்திலே கொல்லி மலையிலே ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதற்கான செயற்குறிப்பை அனுப்பும்படி வேலை வாய்ப்புத்துறை இயக்குநரை நாம் கேட்டு இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 259, 260, மற்றும் 261 ஆகியவை மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்கத் தள்ளி வைக்கப்படுகின்றன.

மணலியில் சலவை சோப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

262—(*வினா எண். 19789)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை அடுத்துள்ள மணலியில் சலவை சோப்புத் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பட்டுநூல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

263—(*வினா எண். 20361)—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் தற்போது எத்தனை பட்டுநூல் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன?

(ஆ) எத்தனைச் சங்கங்கள் இயங்கி வருகின்றன?

(இ) புதியதாகச் சங்கம் துவங்க அனுமதிகேட்டு விண்ணப்பம் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரம் மல்பரி உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கம் என்ற ஒரு சங்கம் உள்ளது,

(ஆ) அச்சங்கம் செயற்படாமல் உள்ளது.

(இ) இல்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மல்பரி உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கம் பல லட்சக்கணக்கான ரூபாயில் முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் ஆரம்பித்தார்கள். அந்தக் கூட்டுறவுச் சங்கம் எதனால் இன்று செயல்படவில்லை? அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு என்ன ஆனது? அது செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மல்பெரி உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் 3-1-1974 அன்று பதிவு செய்யப்பட்டது. 1-4-1974 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சங்கத்தினுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை 55. பங்குத் தொகை ஒன்பது ஆயிரத்து எழுநூற்று முப்பது. இந்தச் சங்கத்தினுடைய உதவியை நாடாமலேயே அவர்கள் பட்டு நூல் உற்பத்தி செய்து வருவதால் அது ஒழுங்காக செயல்படவில்லை. அரசு நிதி எதுவும் அதற்கு கொடுக்கவில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மல்பெரி உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கத்திற்கு லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். அந்தத் தொகைகள் என்ன ஆனது என்பது பற்றியும் அதில் யார் யார் எடுத்துச் சென்றார்கள், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பது பற்றியும் அறிய விரும்புகிறேன். அதோடு மட்டும் அல்லாமல் என்னுடைய மூலக் கேள்வி பட்டுக்கோரா டுவிஸ்டிங் அண்டு ரீலிங் என்று ஒரு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்படுமா என்பது தான்? அந்த பட்டுக்கோரா டுவிஸ்டிங் அண்டு ரீலிங் சங்கம் ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அதோடு மட்டும் அல்லாமல் அந்தக் கூட்டுறவு இணையத்தின் மூலம் டுவிஸ்ட்டிங் செய்பவர்களுக்கு தான் அந்தப் பட்டை வினியோகிக்க வேண்டும். ஆனால் டுவிஸ்ட்டிங் பேக்டரி இல்லாதவர்களுக்கு எல்லாம் அந்த பெடரேஷன் மூலம் வழங்கப்படுகிறது. அது அரசுக்குத் தெரியுமா? இது போன்ற முறை கேடுகளை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வினாக்களுக்கு எந்தவிதமான குறிப்பும் தற்போது என்னிடத்தில் இல்லை.